# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 25 வெள்ளிக்கிழமை 11.10.2024 கதிர் 384



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் முடிவுக்கு வந்தது வேட்பு மனுத்தாக்கல்

பொதுத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் மற்றும் கட்டுப்பணம் செலுத்தும் செயற்பாடுகள் இன்று பகல் 12 மணியுடன் நிறைவடைந்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவிந்துள்ளது.

வேட்புமனுக்களுக்கான எதிர்ப்பு பிரேரணைகள் முன்வைக்கும் நேரம் முடிந்ததும், தேர்தலில் போட்டியிடும் சுயாதீன குழுக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இன்று பிரகடனம் செய்யவுள்ளதாகவும் சின்னங்கள் தொடர்பான அறிவிப்பும் இன்று இடம் பெறும் என்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2➤







## கே.வி.தவராஜா தலைமையில் ஜனநாயக தமிழரசு வேட்புமனு

### சரவணபவன், ஐங்கரநேசனும் களத்தில்

நாடாளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சை குழுவாக போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஜனநாயக தமிழரசு கூட்டமைப்பு இன்று காலை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் கையளித்தது.

தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனத்தில் அதிருப்தியடைந்தவர்களால் இந்தக் கட்சி அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்சி இம்முறை சுயேச்சையாகத் தேர்தலில் போட்டியிடுகின்றது. வேட்புமனு தாக்கல் செய்த பின்பு யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் சென்ற வேட்பாளர்கள் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா நினைவிடத்திற்கு சென்று மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையிலா சுயேட்சை குழுவில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், தமிழரசுக் கட்சியினைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவண் உள்ளிட்டவர்கள் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.



## யாழில் ஐ.தே.கவும் வேட்புமனு

ஐக்கிய தேசியக் கட்சியினர் யாழ்ப்பாணம்தேர்தல்மாவட்டத்துக்குரிய வேட்புமனுவைக் கையளித்தனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஐக்கிய தேசியக் கட்சியினர் யாழ். மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

யாழ். மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, டேவிட் நவரத்தினராஜ் தலைமையில் யானைச் சின்னத்தில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில் 44 அணிகள் இம்முறை தேர்தல் களத்தில்

### 2 சுயேச்சை விண்ணப்பங்கள் நிராகரிப்பு

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 46 வேட்புமனுகள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களால் கையளிக்கபட்ட நிலையில் இரண்டு சுயேட்சை குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டது.

வேட்புமனு தாக்கலுக்கான காலக்கெடு இன்று நண்பகல் நிறைவடைந்த நிலையில் வேட்புமனுக்கள் தொடர்பாக ஆட்சேபனைகளை முன்வைக்க அவகாசம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் இரண்டு சுயேட்சை குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டது.

இம்முறை நாடாளுமன்ற தேர்தலில் 44 அரசியல் கட்சிகள் மற்றும்

6➤

## ஜனநாயகத் தேசியக் கூட்டணி சார்பில் யாழில் களமிறங்குகின்றார் அங்கஜன்



அங்கஜன் இராமநாதன் தலைமையிலான ஜனநாயகத்தேசியக் கூட்டணியினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்புமனுவை இன்று வெள்ளிக்கிழமை கையளித்தனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் எம்.பி. அங்கஜன் இராமநாதன் தலைமையிலான ஜனநாயகத் தேசியக் கூட்டணியினர், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தபால் பெட்டிச் சின்னத்தில் களமிறங்குகின்றனர் .

அவர்கள் இன்று முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில்

6➤

# ஊடகவியலாளர் தரிந்துவை கைது செய்வதற்கு முயற்சி?

## சுதந்திர ஊடகவியலாளர் இயக்கம் கடும் எதிர்ப்பு

புலனாய்வு ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தனவை கைது செய்வதற்கான நகர்வுகள் குறித்து அதன் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தும் சுதந்திர ஊடக இயக்கம், அவரைக் கைது செய்வதற்கான எந்தவொரு முயற்சியும் பலமான எதிர்ப்பையும் பொருத்தமான நடவடிக்கையையும் சந்திக்கும் என்று எச்சரிக்கிறது.

ஜயவர்தனவினால் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் அவரை எதிர்காலத்தில் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனையிட்டு சுதந்திர ஊடக இயக்கம் கவனம் செலுத்தியுள்ளது.

ஜயவர்தனவின் நடவடிக்கைகள் தற்போதைய விசாரணைகளுக்கு இடையூறாக இருப்பதாகவும், அவருக்கு எதிராக பொருத்தமான உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (சிஐடி) மனிதப் படுகொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி இந்துக சில்வா கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததன் பின்னணியிலேயே இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தரிந்து ஜயவர்தன ஒரு புலனாய்வு ஊடகவியலாளர் ஆவார். அவர் 2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விசாரணைகள் உட்பட பல்வேறு சம்பவங்கள் குறித்து விரிவாக அறிக்கையிட்டுள்ளார்.

நீதிமன்றில் நடந்துகொண்ட விதம் காரணமாக குற்றப் புலனாய்வுப் பிரிவிலிருந்து முன்னர் நீக்கப்பட்ட இன்ஸ்பெக்டர் இந்துக சில்வா பின்னர் 2019இல் கோட்டாபய ராஜபக்ஷ நிர்வாகத்தால் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டார். இவரின் நடவடிக்கைகள் குறித்து சுதந்திர ஊடக இயக்கம் அதன் கவலையை வெளியிட்டுள்ளது.

இன்ஸ்பெக்டர் சில்வா, அப்போதைய சிஐடி பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு எதிரான சதிச் செயலில் ஈடுபட்ட அதிகாரியாக ஜெயவர்தனவின் அறிக்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைச் சூழ்ந்துள்ள மர்மங்களை மற்றும் மறைக்கப்பட்ட ஆபத்தான உண்மைகளை வெளிக்கொணரவும் அம்பலப்படுத்தவும் பணியாற்றும் ஓர் ஊடகவியலாளரை பொலிஸார் இலக்கு வைப்பது கவலையளிப்பதாக சுதந்திர ஊடக இயக்கம் குறிப்பிடுகிறது. அதே நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி தொடர்ந்து தாமதிக்கப்படுவதோடு வெறும் அரசியல் வாக்குறுதியாக குறைக்கப்பட்டதாகவும் தோற்றமளிக்கிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவது தற்போது பொலிஸார் எதிர்கொள்ளும் மிக முக்கியமான சவாலாகும் என்பதை மீண்டும் வலியுறுத்தும் அதேவேளை புலன் விசாரணைகள் தடம் புரளாமல் இருப்பதை உறுதி செய்யுமாறும், தனது பணியை சிறப்பாகச் செய்ததற்காக ஊடகவியலாளர்களுக்கு எதிராக குறுகிய நோக்குடன் பழிவாங்கும் நடவடிக்கைகளை தவிர்க்குமாறும் குற்ற விசாரணை பிரிவு மற்றும் காவல்துறையினரை சுதந்திர ஊடக இயக்கம் கேட்டுக்கொள்கிறது.



# மீண்டும் சேவையில் ஷானி அபேசேகர

ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன், ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் பொலிஸ்சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

இவர், ஒரு வருட காலத்திற்கு சேவையாற்றுவார் என, பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர், ஷானி அபேசேகர குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரச இலக்கிய விழா பிற்போடப்பட்டுள்ளது

*அரச இலக்கிய விருது வழங்கும் விழா எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக அனைத்து விழாக்களும் நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர்*

*நடாத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதையடுத்து ஒத்திவைக்கப் பட்டுள்ளது.*



# யாழில் அருண் சித்தார்த் தலைமையில் சர்வஜன அதிகார கூட்டணி வேட்புமனு

*சர்வஜன அதிகார கூட்டணியினர் யாழ்ப்பாணம்தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்புமனுவை இன்று வெள்ளிக்கிழமை கையளித்தனர்.*

*எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் சர்வஜன அதிகார கூட்டணியினர் பதக்கச் சின்னத்தில் களமிறங்குகின்றனர்.*

*அவர்கள் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக இன்று முற்பகல் 9.30 மணியளவில் மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.*

*யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் அருண் சித்தார்த் தலைமையில் சர்வஜன அதிகார கூட்டணியினர் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# 13 நடைமுறைக்கு வருவதை தடுக்க நாம் நாடாளுமன்றம் வரவேண்டும்

## சரத் வீரசேகர தெரிவிப்பு



மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழங்கிவிடலாம் என்றும், இதனால் இதனை தடுப்பதற்காக தன்னைப் போன்றோர் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்றும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான கொழும்பு மாவட்ட வேட்பு மனுவில் கையெழுத்திட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே சரத் வீரசேகர இவ்வாறு கூறியுள்ளார்.

சரத் வீரசேகர மேலும் தெரிவிக்கையில், அநுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 2015ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பை செயற்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. லால் விஜேநாயக்க குழுவினால் அந்த அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டதுடன் அந்த குழுவில் தற்போதைய பிரதமரும் உறுப்பினராக இருந்தார்" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"அந்த அரசியலமைப்பு வரைபில் மதச்சார்பற்ற நாடாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று நாடு சமஷ்டியாக வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை பார்க்கும் போது ஜெர்மன் பெடரேஷனுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கும் மேலான அதிகாரங்களை கொண்டதாக இருக்கும்" என்று சரத் வீரசேகர தெரிவித்திருக்கின்றார்.

"இதன்படி நாடு 9 சுயாதீன அரசுகளாக மாற்றப்படும்" என்றும், "இதனால் ஒற்றையாட்சி முழுமையாக இல்லாமல் செய்யப்படும்" என்றும் தெரிவித்திருக்கும் சரத் வீரசேகர, "அதேபோன்று பௌத்த மதத்திற்குரிய முன்னுரிமை இல்லாமல் போகும். இதனால் தடுக்க வேண்டுமாயின் எங்களை போன்றோர் நாடாளுமன்றம் போக வேண்டும்" என்றும் கூறியிருக்கின்றார்.

"தேவைப்பட்டால் காணி, பொலிஸ் அதிகாரங்களை அநுரகுமார திஸ ாநாயக்கவினால் வழங்க முடியும். அவ்வாறு வழங்கினால் நாடாளுமன்றத்தில் எங்களால் தடுக்க முடியுமாக இருக்கும்" என்று தெரிவித்த சரத் வீரசேகர, "அநுரகுமாரவுக்கு 42 வீதமான வாக்குகளே கிடைத்துள்ளன. 58 வீத வாக்குகள் எதிராகவே கிடைத்துள்ளன. இந்நிலையில் நாட்டின் ஒற்றையாட்சி, நாட்டின் இராணுவத்தினரின் பெருமையை ஆபத்தில் தள்ள நாங்கள் இடமளிக்க மாட்டோம்" என்றும் கூறினார்.

"இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்திருந்த போது 13ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்துமாறும், மாகாண சபைகள் தேர்தலை நடத்துமாறும் கூறியுள்ளார்" என்று சுட்டிக்காட்டிய சரத் வீரசேகர, "இவ்வாறாக வெளிநாடுகளுக்கு சார்பான வெளிநாட்டு கொள்கைளை நாங்கள் பேணக்கூடாது. அவர்களின் அழுத்தத்தில் செய்வதை தடுக்க வேண்டுமாயின் நாங்கள் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தினார்.

# மதுபானசாலை விவகாரத்தில் மொட்டு வேட்பாளர் சவால்



யாருக்கும் மதுபான சாலை அனுமதி பெற்றுக் கொடுக்கவில்லை என வெளிப்படையாக வாக்குமூலம் வழங்குமாறு பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் மற்றும் முன னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் யாழ் மாவட்ட வேட்பாளர் கீத்நாத் காசிலிங்கம் சவால் விடுத்துள்ளார்.

இன்று அவர் பதிவிட்டுள்ள சமூக வலைத்தள பதிவிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த பதிவில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

"நான் என்னுடைய வேட்புமனுவை தாக்கல் செய்துவிட்டேன். உங்களின் அன்பான வாழ்த்துகளுக்கு நன்றி.

அத்துடன் நான் எனக்கோ என்னுடைய குடும்பத்துக்கோ, உறவினர்களுக்கோ நண் பர்களுக்கோ அல்லது எனக்குத் தெரிந்த யாருக்கோ மதுபானசாலை அனுமதிப்பத்திரத்தைக் கோரவோ அல்லது மத்தியஸ்தம் பண்ணவோ இல்லை என்பதை உறுதிப்படுத்தி வெளிப்படையாக ஒரு வாக்குமூலத்தை வழங்குகிறேன்.

யாழ் மாவட்டத்தின் என் சக வேட்பாளர்கள் குறிப்பாக பழைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதையே செய்ய வேண்டும் என நான் சவால் விடுக்கிறேன்.

அண்மைய மாதங்களில் வடக்கில் பல மதுபானக்கடைகள் தோன்றியதன் காரணமாக நாளாந்தக் கூலித்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அப்பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் மற்றும் பிள்ளைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

# அம்பாறையில் முஸ்லிம் காங்கிரஸ் இன்றுகாலை வேட்புமனுத் தாக்கல்

(வி.ரி.சகாதேவராஜா)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட வேட்பாளர்கள் இன்று வெள்ளிக்கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவை



தாக்கல் செய்தனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசால் காசிம், எம் ஐஎம். மன்சூர், மற்றும் எம் எஸ். அப்துல் பாஷித், எம்எஸ். உதுமாலெப்பை, ஏ.எல்.தவம், ரஹ்மத் மன்சூர், ஏஎல்.முஸ்மி,சிராஸ் மீராசாஹிப், ஏஆர்.அமீர்,கேஎச். திலக் ரஞ்சித் ஆகியோர் ஒப்பிட்டுள்ளனர்.

இன்று பகல் 11.30 மணியளவில் வேட்பாளர் பட்டியல் அம்பாறை மாவட்ட செயலகத்தில் கையளிக்கப்பட்டது. இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் சட்டத்தரணி நிஷாம் காரியப்பர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

# நடிகை தமிதா ஏமாற்றம்



ஐக்கிய மக்கள் சக்தியின் இரத் தினபுரி மாவட்ட வேட்புமனு பத்தி ரத்தில் பிரபல நடிகை தமிதா அபேரத்னவின் பெயர் குறிப்பிடப படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்புமனுவில் கையொப்பமிடுவதற்காக இன்று இரத்தினபுரி மாவட்ட செயலகத்துக்குச சென்றபோது அந்தப் பட்டியலில் அவரது பெயர் இல்லை எனத் தெரிய வந்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தமிதா அபேரத்ன ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.





# யாழில் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி வேட்புமனு தாக்கல்

முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சி, ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் கீழ்எதிர்வரும்நாடாளுமன்றத்தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவைத் தாக்கல் செய்தது.

எதிர்வரும்நாடாளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக இன்று முற்பகல் 11 மணியளவில் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியினர் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர். யாழ்ப்பாணம் மாவட்ட முதன்மை வேட்பாளராக ஞானப்பிரகாசம் சுலக்சன் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியினர் கண்ணாடிச் சின்னத்தில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு அம்பாறையில் வேட்புமனுத் தாக்கல்

(வி.ரி. சகாதேவராஜா)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு அம்பாறை மாவட்ட வேட்பாளர்கள் இன்று வெள்ளிக்கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்தனர்.

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் தவிசாளருமான சோமசுந்தரம் புஸ்பராஜா உள்ளிட்ட பத்து பேர் வேட்புமனுவில் ஒப்பமிட்டிருந்தனர்.

சங்கு சின்னத்தில் போட்டியிடும் வேட்புமனுவில் சோமசுந்தரம் புஷ்ப ராஜா, சபாபதி நேசராசா, கதிர்காமத்தம்பி வேலுப்பிள்ளை , கிருஷ்ணபிள்ளை லிங்கேஸ்வரன், சிந்தாத்துரை துரை சிங்கம், சுப்பிரமணியம் தவமணி, தியாகராஜா கார்த்திக், ராஜகுமார் பிரகாஷ், செல்லத்தம்பி புகனேஸ்வரி, பாலசுந்தரம் பரமேஸ்வரன் ஆகியோர் ஒப்பிட்டுள்ளனர்.

இன்று பகல் 11.30 மணியளவில் வேட்பாளர் பட்டியல் அம்பாறை மாவட்ட செயலகத்தில் கையளிக்கப்பட்டது.

# நுவரெலியாவில் இ.தொ.கா வேட்பு மனு



நடைபெறவுள்ள 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக அதன் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் தவிசாளர் மருதபாண்டி ராமேஷ்வரன் உள்ளிட்ட குழுவினர் இன்று வெள்ளிக்கிழமை காலை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டணியின் கீழ் யானை சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

இதன் நுவரெலியா மாவட்ட தலைமை வேட்பாளரான ஜீவன் தொண்டமான் மற்றும் வேட்பாளர்கள் உள்ளிட்ட பலர் மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்து வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.




# காதர் மஸ்தான் வன்னியில் வேட்புமனு



வன்னி மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை முன்னாள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தாக்கல் செய்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் இலங்கைத் தொழிலாளர் கட்சியின் கங்காரு சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

இந்நிலையில், வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை அவர் வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

இதன்போது கட்சியின் முக்கியஸ்தர்கள் வருகை தந்திருந்தனர்

# தமிழரசு வேட்பாளர் தெரிவுக்குழுவில் வேட்பாளர்களை நிறுத்தியது தவறு!

## ஏதேச்சாதிகாரத்துடன் சிலர் செயற்படுவதாக கூறுகிறார் தவராஜா

தமிழரசுக் கட்சியிலிருந்து ஒரு சிலரின் நன்மைக்காக தமிழ்தேசியத்தை அழிப்பதை விரும்பாததன் காரணமாக தமிழரசு கட்சியிலிருந்து விலகி புதிய ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பை உருவாக்கினோம் என்று தமிழரசு கட்சியின் முன்னாள் கொழும்புக் கிளை தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.

ஜனநாயக தமிழரசுக்கூட்டமைப்பை உருவாக்கியதன் நோக்கம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வரு மாறு -




“தமிழரசு கட்சி தமிழ் மக்களின் ஆணையிலிருந்து விலகி ஒரு சிலரின் ஏதேச்சை அதிகாரங்களுடன் செயல்பட்டு வரும் நிலையில் அந்தக் கட்சியிலிருந்து முதலாவதாக

வெளியேறியவன் நான். நான் வெளியேறியமைக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. அதனை மக்களுக்கு வெளிப்படையாகவே கூற விரும்புகிறேன்.

முதலாவதாக கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழரசு கட்சி சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்க எடுத்த தீர்மானம் கட்சியின் தீர்மானமாக கருத முடியாது. ஏனெனில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக வவுனியாவில் கலந்துரையாடலுக்கு வருமாறு அழைக்கப்பட்ட நிலையில் அங்கு கலந்துரையாடல் இடம்பெறவில்லை.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஒரு வெள்ளை பேப்பரில் ஏதோ எழுதிக் கொண்டு வந்து சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தை எடுக்கிறோம் என அவர் தன்னுடைய தீர்மானத்தை கட்சியின் தீர்மானமாக தெரிவித்தார்.

நான் அதைப் பிழை எனக் கூறினேன் கலந்துரையாடலுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டு கலந்துரையாடல் இடம்பெறாமல் தீர்மானம் எடுக்கும் கூட்டமாக

மாறியதால் நான் அது தவறு என சுட்டிக்காட்டி வெளியேறினேன்.

அடுத்ததாக ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஒரு குழு அமைக்கப்படதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்த குழு கூடவும் இல்லை ஜனாதிபதி தேர்தலில்

போட்டியிடம் பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் ஆராயவும் இல்லை. கலந்துரையாடவும் இல்லை.

அது மட்டும் அல்லாது நல்லூர் ஆலய தேர்த்திருவிழா அன்று ஜனாதிபதி வேட்பாளர் யாருக்கு ஆதரவு வழங்குவது என்ற மற்றொரு கூட்டம் அழைப்பு விடுக்கப்பட்டது. தமிழரசு கட்சியைச் சேர்ந்த பல மத்திய குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை.

தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா வைத்தியசாலையில். தெரிவுத் தலைவர் வெளிநாட்டுக்குச் சென்றமை தெரிந்தும் வவுனியாவில் கூட்டம் கூட்டப்பட்டது.

தற்போது நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான குழு கூடிய போது அதில் வேட்பாளராக சமூக ஊடகங்களில் தங்களை அறிமுகப்படுத்தியவர்கள் தெரிவுக் குழுவில் அங்கம் வகித்தமை முரணான விடயம்.

அது மட்டும் அல்லாது வேட்பாளர் தெரிவிக் குழுவில் மட்டக்களப்பில் இருந்து நான்கு பேரை நியமித்தார்கள் கொழும்பு மாவட்டத்தில் இருந்து எவரையும் நியமிக்கவில்லை. நான் கொழும்புக் கிளை தலைவராக 14 வருடங்கள் இருக்கிறேன். இவ்வாறு திட்டமிட்ட முறையில் தமிழ் தேசியத்தை அழிப்பதற்காக சிலர் தெற்கு முகவர்களுடன் கைகோர்த்து தமிழரசு கட்சியை அழிப்பதை அதே கட்சியிலிருந்து பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை.


தமிழரசு கட்சி பல்வேறு சந்தர்ப்பங்களில் திசை மாறி சென்ற போது தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு பல தடவைகள் சுட்டிக்கட்டிய போதும் அவரால் தீர்க்கமான முடிவுகளை எடுக்க முடியவில்லை. நான் 14 வருடங்கள் தமிழரசு கட்சியில் அங்கம் வகித்தவன் என்ற நீதியில் காட்சியில் எந்த ஒரு பதவியையும் கேட்டுப் பெறவும் இல்லை.

பணம் சம்பாதிப்பதற்காக கட்சியைப் பயன்படுத்தியதும் இல்லை. இரண்டு தடவைகள் என்னை தேசியப் பட்டியலில் போட்டார்கள் ஒரு தடவை எனக்குத் தெரியாமலே என்னை தேசியப் பட்டியலில் இருந்து நீக்கி ஒரு பெண்ணை புதிதாக அறிமுகப்படுத்தினார்கள். நான் கட்சியில் போர் கொடி தூக்கவில்லை.

இவ்வாறான நிலையில் தமிழரசு கட்சிக்குள் தெற்கு அரசியலை முழுமையாக புகுத்த வேண்டுமென சிலர் முழுமையாக செயல்பட்டு வரும் நிலையில் தமிழ் தேசியத்தை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்துக்காக கட்சியிலிருந்து வெளியேறினேன்” என்று தெரிவித்தார்.



# வன்னியில் இன்று ரிஷாத் வேட்புமனு



வன்னி மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தாக்கல் செய்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரானரிஷாத்பதியுதீன் ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

அவர் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

இதன் போதுரசிகா பிரியதர்சினி, நிராாஸ் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் மாவட்ட அமைப்பாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் /ஹனைஸ் பாஷரூக் உள்ளிட்ட வேட்பாளர்களும் வருகை தந்திருந்தனர்.

கட்சியின் முக்கியஸ்தர்களும் இதன்போது வருகை தந்திருந்தனர்.



# யாழில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்புமனு

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஐக்கிய மக்கள் சக்தி தாக்கல் செய்தது.

இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் முருகேசு சந்திரகுமார் தலைமையிலான வேட்பாளர் அணியினர் வேட்புமனுவைக் கையளித்தனர்.



# சங்கரியின் 'உதயசூரியன்' யாழ்ப்பாணத்தில் போட்டி

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்புமனுவை இன்று கையளித்தனர்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக இன்று முற்பகல் 10.30 மணியளவில் வீ. ஆனந்தசங்கரியை முதன்மை வேட்பாளராகக் குறிப்பிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உதயசூரியன் சின்னத்தில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜனநாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

அங்கஜன் இராமநாதன் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுயேட்சை குழுக்கள் இம்முறை யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் களமிறங்கவுள்ளன.

அதிகளவான அணிகள் போட்டியிடும் தேர்தலாக இரு இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கடுமையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிலையில், 22 தேர்தல் மாவட்டங்களிலும் உள்ள தேர்தல் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், தெரிவத்தாட்சி அலுவலகங்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதேவேளையில், பிரதான கட்சிகள் தமது தேசியப்பட்டியல் வேட்பாளர்களின் பெயர்களையும் வெளியிடத் தொடங்கியுள்ளன.







# கிளிநொச்சியில் நடைபெற்ற மாலதியின் நினைவு நிகழ்வு








தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முதல் பெண் மாவீரர் 2ம் லெப்ரினன்ட் மாலதியின் நினைவு நிகழ்வு கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் தனியார் விடுதியில் நேற்று மாலை நடைபெற்றது.

கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ச.ஜீவராசா தலைமையில் நடைபெற்ற நினைவு நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் த.குருகுலராஜா, தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள், பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். மாலதியின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. நினைவாக தர்மபுரம் பிரதேசத்தையைச்சேர்ந்த 150 மாணவர்களுக்கு கற்றல் உபரணாங்களும் வழங்கப்பட்டது. நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் உரையாற்றிருந்தார்.

ஞூதமிழ்த் தேசிய இன அடையாளத்தை வெளிப்படுத்த நாம் ஜனநாயக தேர்தலை இன்னும் சில நாட்கள் உள்ளன. தேர்தலில் பல்வேறு கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் களம் இறங்கினாலும் தமிழரசுக்கட்சி நாங்கள் சமஸ்டி கொள்கையுடனே களம் இறங்குகின்றோம். சிங்கள மக்கள் வாழ்கின்ற உரித்து எமக்கும் கிடைக்க வேண்டும். தேர்தலை சர்வதேச சமூகம் பார்க்கிறது. தேர்தலில் வெற்றி பெற முனைவது கூட எமது இனத்திற்காகவே" என்று சிறிதரன் இங்கு தெரிவித்தார். (113)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# சம்மாந்துறையில் உலக மனநல தினம் அனுஷ்டிப்பு









(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் மனநலப் பிரிவு ,கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட 2024ம் ஆண்டுக்கான உலக மனநல தினம் நேற்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீன்,உட்பட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உயர் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

“பணியிடத்தில் மனநலத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய நேரம் இது” எனும் தொனிப்பொருளினை மையப்படுத்தி இவ் ஆண்டின் உலக மனநல தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது.

இது பணியிட நல்வாழ்வின் இன்றியமையாத அம்சமாக மனநலம் வளர்ந்து வரும் அங்கீகாரத்தை பிரதிபலிக்கிறது. பணியிடங்கள் மனநலத்திற்கு முன்னுரிமை அளிப்பது, மன அழுத்தத்தைக் குறைப்பது மற்றும் பணியாளர்களுக்கு மிகவும் ஆதரவான சூழலை உருவாக்குவது போன்ற விவாதங்களை வளர்ப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த நிகழ்வில் விழிப்புணர்வு வீதி நாடகம் மற்றும் நடைபவனி என்பனவும் இடம்பெற்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.10.2024 இல் வெளியிடப்பெற்றது.